2015 செப்டம்பர் 4]

232—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***48899—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதியதாக துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 31 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே, அரசுக் கல்லூரிகளாக திருத்தணியில் ஒன்றும், பொன்னேரியில் ஒன்றும் என 2 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. பட்டாபிராமில் அரசு உதவி பெறும் கல்லூரி ஒன்று செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மதுரவாயலைப் பொறுத்தவரையில், அது சென்னைக்கு மிக அருகிலேயே இருக்கக்கூடிய இடம். மாநிலத்தினுடைய தலைநகரை ஒட்டியிருக்கக்கூடிய பகுதி மதுரவாயல். ஆகவே, அங்கே இருக்கக்கூடிய மாணவ, மாணவியர்கள் கல்வி பயில்வதற்கு வேண்டிய வசதிகள் சென்னையில் இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், சென்னையிலே இருக்கின்ற 36 கல்லூரிகளில் 6 கல்லூரிகள் அரசுக் கல்லூரிகளாக இருக்கின்றன. ஆகவே, அந்த வகையிலே மதுரவாயலில் தற்போது கல்லூரி தொடங்குவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகர்ப் பகுதி என்பது விரிவாக்கப்பட்ட ஒரு பகுதி. அயப்பாக்கம் ஊராட்சியில் அரசுப் பள்ளிகளில் கிட்டத்தட்ட 1,500-க்கும் மேற்பட்ட குழந்தைகள் படிக்கிறார்கள். அதேபோல, போரூர், வளசரவாக்கம், ஆழ்வார்திருநகர் போன்ற பகுதிகளில் அரசுப் பள்ளிகளில் கூடுதலாக மாணவர்கள் படிக்கிறார்கள். சென்னை புறநகர்ப் பகுதியைப் பொறுத்தவரையில், 42 local bodies adopt செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டாவதாக, சென்னை புறநகர்ப் பகுதிகளில், கடந்த 10 ஆண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஏதும் தொடங்கப்படவில்லை. எனவே, 6 அரசு கலைக் கல்லூரிகள் சென்னையில் இருந்தாலும், அந்தப் பிள்ளைகள் வந்து படிப்பதற்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி மற்றும் பொன்னேரியில் கல்லூரிகள் இருந்தாலும், அவை மாவட்டத்தின் இன்னொரு கடைசி பகுதி. எனவே, சென்னை புறநகர்ப் பகுதிக்கு வரவேண்டுமென்றால், மிகவும் சிரமம். ஆவடி தொகுதி மற்றும் திருவேற்காடு நகராட்சியில் கிட்டத்தட்ட 20 ஆயிரம், 22 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலித்து, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, சென்னையை ஒட்டியுள்ள பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இதுவரை துவக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உறுப்பினருடைய மாவட்டமான, திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூரில் சென்னைப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்றைத் துவக்கி வைத்து, அங்கே மாணவர்கள் பயின்று வருகிறார்கள். ஆகவே, அவர் சொன்ன கருத்து தவறானதாகும். சென்னையைப் பொறுத்தவரையில், கல்லூரி மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய வசதி இருக்கிறது. மேலும்,

2015 செப்டம்பர் 4]

சென்னை மாநகராட்சியில் ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தது 2 ஏக்கர் நிலம் தேவைப்படும். ஏற்கெனவே 5 ஏக்கர் நிலம் தேவைப்படும் நிலை இருந்தது. நிலம் எடுப்பது என்பது சிரமம் என்பதைக் கருதித்தான், மாண்புமிகு அம்மா அவர்கள், அது மாநகராட்சிப் பகுதியாக இருந்தால் 2 ஏக்கர் நிலம் போதும் என்ற ஓர் ஆணையை பிறப்பித்திருக்கிறார்கள். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நிலம் எங்கு இருக்கிறது என்று கண்டறிந்து, விவரங்களைச் சொல்வாரேயானால், எதிர்காலத்தில் மாணவர்களின் நலன் கருதி அங்கே புதிய கல்லூரி அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கார்ப்பரேஷனில் 15 divisions உள்ளன. 147-வது வார்டில் இரண்டரை ஏக்கர் நிலம் உள்ளது. அதேபோல, அடையாளம்பட்டு என்ற கிராமத்தில் 8 ஏக்கருக்கும் மேலான அரசு இடம் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோடு பேசி, அந்த இடத்தை வகை மாற்றம் செய்யலாம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டு இல்லை என்றாலும்கூட, அடுத்த நிதியாண்டில் அங்கே புதிய கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், அது மிகவும் பிற்படுத்தப்பட்ட, தலித் மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய ஒரு பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார்கள். அது உண்மையிலேயே குறிப்பிடத்தக்கது. எனவே, மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, கல்லூரி அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல, நிலம் இருப்பின் வருவாய்த் துறையுடன் கலந்து பேசி, அதுபோன்று நடவடிக்கை எடுக்கப்படும்.*

மேலும், புதிதாக ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், தொடரும் செலவு, அதாவது பணியாளர்கள் சம்பளம், ஆசிரியர் சம்பளம் போன்றவற்றுக்கு ஆண்டுக்கு 92 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தொடராச் செலவினம், அதாவது, கட்டடங்கள் கட்டுவதற்கு 7 கோடியே 25 இலட்சம், தளவாடங்கள், கணினி, மேசைகள், நூலகங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு 30 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், 8 கோடியே 40 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரை இல்லாத அளவிற்கு தற்போது 4 பொறியியல் கல்லூரிகள், 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என மொத்தம் 53 கல்லூரிகளைத் தந்திருக்கிறார்கள். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இதுவரை இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைத் தந்து, அதற்காக மட்டுமே 174 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். 14 அரசு கலைக் கல்லூரிகளுக்காக மட்டுமே 94 கோடியே 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையில் நிதிநிலைக்கேற்ப, அங்கே இடம் இருப்பின், அரசு அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தருமபுரி மாவட்டத்தில் காரிமங்கலம் மற்றும் நல்லம்பள்ளி ஆகிய இரண்டு*

2015 செப்டம்பர் 4]

இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டு வட்டங்கள் அமைத்துத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களை என் சார்பாகவும், அந்தப் பகுதி மக்கள் சார்பாகவும் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களாக தமிழ்நாடு முழுவதும் 44 ஒன்றியங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில், தருமபுரி மாவட்டத்திலே பாலக்கோடு, காரிமங்கலம், பெண்ணாகரம் ஆகிய மூன்று ஒன்றியங்களும் அடங்கும். கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்பகுதிகளில் மாதிரிப் பள்ளிகளை வழங்கி, இன்றைக்கு கல்வியிலே ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள். 2012 ஆம் ஆண்டிலே +2 வகுப்பில் 80.97 ஆக இருந்த தேர்ச்சி சதவிகிதத்தை 2015 ஆம் ஆண்டிலே 92.29 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்த்திக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உயர் கல்வி மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையிலே, இந்திய அளவில் உயர் கல்வியில் சேருபவர்களின் எண்ணிக்கை 21 சதவிகிதம் என்றும், தமிழ்நாடு அளவிலே 42 சதவிகிதம் என்றும் அறிவிப்பிலே கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டிலே தேர்ச்சி பெற்ற 92.29 சதவிகித மாணவர்களில், 83 சதவிகித மாணவர்கள் உயர் கல்விக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015-2016 ஆம் ஆண்டிலே பாலக்கோடு தாலுகாவில் உள்ள 22 அரசுப் பள்ளிகளில் 3,497 பேரும், 6 தனியார் பள்ளிகளில் 554 பேரும் என ஒட்டுமொத்தமாக 4,051 பேர் இன்று +2 தேர்வு எழுதக்கூடிய சூழலிலே படித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பாலக்கோட்டிலே அரசு கலை மற்றும் அறிவியல்

[2015 செப்டம்பர் 4

கல்லூரி ஒன்று புதிதாகத் துவங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசியபோது, தருமபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு, காரிமங்கலம் மற்றும் நல்லம்பள்ளி ஆகிய ஒன்றியங்கள் கல்வியிலே பின்தங்கிய ஒன்றியங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அங்கே ஒரு கல்லூரி தொடங்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தருமபுரி மாவட்டத்தில் இதுவரையில் இல்லாத அளவில் ஒரு பொறியியல் கல்லூரியும், அரூரில் ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், பாப்பிரெட்டிப்பட்டியில் ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும் தொடங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற காரிமங்கலத்தில், அந்தக் குறையைப் போக்குகிற வகையிலேதான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அங்கே மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கி சிறப்பித்துள்ளார்கள். அதற்கான கட்டடப் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. ஆகவே, தருமபுரி மாவட்டம், கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் என்ற நிலையை மாற்றி, கல்வியிலே உயர்ந்து வரும் மாவட்டமாக, கல்வியிலே நிலை உயர்ந்து வருகிற மாவட்டமாக மாற்றியிருக்கிற பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, கல்வியிலே புரட்சி ஏற்படுத்தி, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே எங்குமே இல்லாத அளவிற்கு உயர் கல்வியை உயர்ந்த நிலைக்கு, உன்னத நிலைக்குக் கொண்டு சென்ற பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வியிலே பின்தங்கியிருக்கிற பாலக்கோடு ஒன்றியத்திலே ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கொண்டு சென்று, அதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

புதிய வணிக வளாகம்

***38480—திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாநகராட்சி, புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய வணிக வளாகம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.